புதிய நாடாளுமன்றக் கட்டிடம் திறக்கப்படும் சரித்திர நிகழ்வில் - குடியரசுத் தலைவரை அறவே புறக்கணிப்பது என்பது

மோடி அரசின் ஜனநாயக விரோதப் போக்கிற்கு பெரிய சான்று!

“நியூஸ் -18” ‘சொல்லதிகாரம்’ விவாத நிகழ்ச்சியில் - பத்திரிகையாளர் கார்த்திகேயன் கண்டனம்!

நியூஸ் 18 தொலைக்காட்சியில் ‘சொல்லதிகாரம்’ நிகழ்ச்சியில், “புதிய நாடாளுமன்றத் திறப்பு, எதிர்க்கட்சிகள் போர்க்கொடி, குடியரசுத் தலைவருக்கான உரிமைக் குரலா? மோடி எதிர்ப்பு அரசியலா?” என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதத்தில் பத்திரிகையாளர் கார்த்திகேயன் அவர்களின் விவாதம் வருமாறு:

நெறியாளர்: புதிய நாடாளுமன்ற கட்டிடத் திறப்பு விழாவில் குடியரசுத் தலைவரை அழைக்க வேண்டும் என்பது 36 சதவிகிதத்தினரின் கோரிக்கைதான் என்று சொல்லப்படுகிறதே. இது குறித்து நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

பத்திரிகையாளர் கார்த்திகேயன்: இந்த நாடாளுமன்றத் திறப்பு விழாவினை எந்த அளவிற்கு அரசியல் படுத்த நினைக்கிறார்கள் என்பதை இதிலிருந்தே புரிந்து கொள்ளலாம். அப்போது, 1947 இல் ஆட்சியை மாற்றிக் கொடுப்பதற்காக செங்கோல் தேவைப்பட்டது, காலனி ஆதிக்கத்தில் இருந்து நாம் சுதந்திர நாடாக நம் கையில் அதிகாரம் வழங்குவதற்காக அப்போது செங்கோல் பயன்படுத்தப்பட்டது என்பதெல்லாம் சரி, அதற்குப் பிறகு 1950 இல் நாம் குடியரசாக ஆகி விட்டோம்.

நமக்கென்று ஒரு அரசியலமைப்புச் சட்டம் வந்துவிட்டது. இப்போது அரசியல் அமைப்புச் சட்டம்தானே நமது கவர்ன்மெண்ட். அதில் யார் பிரதமராக இருந்தாலும், யார் குடியரசுத் தலைவராக இருந்தாலும், அரசியலமைப்புச் சட்டத்தின் விதி ஆர்ட்டிக்கல் 79 -ன்படி, அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர், இரண்டு அவைகள்தானே அங்கம். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி தானே இவை செயல்பட வேண்டும்.

நெறியாளர்: இங்கே விவாதத்தில் பங்கேற்ற தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் இது குறித்த ஒட்டுமொத்த கருத்துகளின் சாராம்சத்தையும் உள் ளடக்கி, (ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் விவாதத்தில் பேசுகையில் தமிழ்நாடு, சத்தீஷ்கர் மாநில சட்டமன்றங்கள் திறந்த போதும் ஆளுநரை அழைக்கவில்லை என்று மேற்கோள் காட்டி பேசினார்) இங்கே கருத்துகளை பகிர்ந்து கொண்டார், நீங்கள் அது குறித்து பேசுங்கள்.

பத்திரிகையாளர் கார்த்திகேயன்: தமிழ்நாட்டில் சட்டமன்றம் திறந்து வைத்த போது பிரதமர் தலைமையில்தான் செய்யப்பட்டது, சத்தீஷ்கரில் செய்யவில்லை என்று தெலுங்கானா ஆளுநர் பேசினார், அவர்கள் தான் தவறு செய்துவிட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம், நீங்கள் சரியாக அதனைச் செய்ய வேண்டியதுதானே.

செங்கோல் முக்கியமா, இந்திய அரசியலமைப்பு சட்டம் முக்கியமா? செங்கோல் என்று சொல்லிவிட்டு, தமிழ் பின்னாடி போய் ஒளிந்து கொள்வது சரியல்ல. அவர்கள் சொல்லும் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

நான் சொல்வது அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்றம் என்பது, குடியரசுத் தலைவர் மற்றும் இரண்டு அவைகள். அதில் முதலில் வருவது கவுன்சில் ஆப் ஸ்டேட்ஸ். அதற்கு பிறகுதான் ஹவுஸ் ஆப் பீப்பில்ஸ் வருகிறது. அப்போது இந்த நாடாளுமன்றத்தின் இரு அவைகள் இருக்கின்றதே, ஏன் அழைப்பிதழில் கூட துணைக் குடியரசுத் தலைவர் ராஜ்யசபாவின் தலைவர், அவருடைய பெயரும் அந்த அழைப்பிதழில் இல்லை. பாராளுமன்றம் என்பது மக்களவை மட்டும் தானா? அதில் மாநிலங்களவையும் இருக்கிறது. அதனுடைய தலைவரை அழைப்பிதழில் போடாதபோதே அவர்களின் நோக்கம் அதில் தெரிகிறது. துணை குடியரசுத் தலைவர் ராஜ்யசபாவின் தலைவர் என்ற முறையில் அழைக்கப்பட்டால் குடியரசுத் தலைவரைப் புறக்கணித்துவிட்டு துணை குடியரசுத் தலைவரை மட்டும் அழைக்க முடியாது, அதனால் ராஜ்யசபாவின் தலைவரையும் இதற்கு அழைக்காமல், நாடாளுமன்ற சபாநாயகர் ஓம். பிர்லா அவர்களின் பெயரை மட்டும் இடம் பெறச் செய்து இருக்கிறார்கள்.

நெறியாளர்: ஆளுநர் தமிழிசை, குடியரசுத் தலைவரே நீங்களே திறந்து வையுங்கள் என்று பிரதமரை கேட்டுக் கொண்டதாக...” என்று கூறினாரே?

பத்திரிகையாளர் கார்த்திகேயன்: இப்படி விவாதங்கள் எல்லாம் வைக்கலாம். ஒரு பிரதமர் என்ன சொல்ல வேண்டும், நியாயப்படி நீங்கள்தான் வந்து ஹெட் ஆப் த ஸ்டேட். அரசியலமைப்புச் சட்டத்தின் படி, ஆர்ட்டிக்கல் 79 ன் படி, நாடாளுமன்றம் என்பதே முதலில் குடியரசுத் தலைவர் தான், அதன் பிறகு இரண்டு அவைகள், நாடாளுமன்றத்தை விளக்கம் போது இதனைத்தான் அரசியலமைப்புச் சட்டம் சொல்கிறது. நீங்கள் யூனியன் ஹோம் மினிஸ்ட்ரி மத்திய உள்துறை அமைச்சகம், டேபிள் ஆப் தி பிரசிடென்சி என்று சொல்லி ஒரு வரைமுறை வைத்து இருக்கிறது. அதிகாரப் பூர்வமாக என்ன வரிசையில், யார் முதலில் ஆரம்பிக்கிறார் என்று வரிசையாக பெயர்களை வரையறுத்து இருக்கிறது.

அதில் முதலில் குடியரசுத் தலைவர்தான் வருகிறார். இரண்டாவது துணை குடியரசுத் தலைவர் வருகிறார். மூன்றாவதாகத் தான் பிரதமர் வருகிறார். இது தான் டேபிள் ஆப் பிரசிடென்சி, இதை ஒன்றிய உள் துறை அமைச்சகம் பிரதமர் செக்கிரடேட்டின் ஒப்புதலோடு - இப்போது கூட வெப் சைட்டில் இது இருக்கிறது அதனை நீங்கள் பார்க்கலாம்.

அதன் படி பார்த்தால் தொடக்க விழாவை செய்ய வேண்டியது யாரு, பிரதமரா? குடியரசுத்தலைவர்தானே செய்ய வேண்டும். **நீங்கள் அவரை முற்றிலுமாக புறக்கணித்து விட்டு போகிறீர்கள், அவர் கேட்டுக் கொண்டார் என்பதாவது, முதலில் ஒரு நிகழ்ச்சிக்கு குடியரசுத் தலைவர் வருவதாக இருந்தால், அவர் பங்கு கொள்கிற நிகழ்ச்சியாக இருந்தால், அவருடைய பெயர் அழைப்பிதழில் இருக்க வேண்டும். அதனை தவிர்க்கவேண்டும் என்பதற்காக, பிரதமர் தலைமையில் விழா நடக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தானே அவர்கள் இல்லாமலேயே விழா நடத்துகிறார்கள்.**

நெறியாளர்: விழா மிகவும் எளிமையாகத் தானே நடத்துகிறார்கள் என்கிறார்களே?

பத்திரிகையாளர் கார்த்திகேயன்: என்ன எளிமையாக வேண்டுமானாலும் நடத்தட்டும், ஒரே ஒரு கேள்விதான், குடியரசுத் தலைவர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கப்போகிறாரா இல்லையா?

நெறியாளர்: பங்கேற்க மாட்டார் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை என்று சொல்கிறார்களே?

பத்திரிகையாளர் கார்த்திகேயன்: இருக்கலாம், ஆனால் பத்திரிகையில் அவர் பெயரை போட்டாகனும். குடியரசுத் தலைவர் வரக் கூடிய நிகழ்ச்சியில் அவர் பெயரை புறக்கணிச்சுட்டு நீங்கள் அழைப்பிதழை அடிக்க முடியாது. அதற்காகத்தான் நான் டேபிள் ஆப் பிரசிடென்சியை மேற்கோள் காட்டினேன். அதன் படி முதலில் அவர் தான் வருகிறார். அதற்குப் பிறகு துணை குடியரசுத் தலைவர் பிறகு தான் பிரதமர் வருகிறார்.

நெறியாளர்:இது அழைப்பிதழ், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கால் லெட்டர் மாதிரி இதனைப் பார்க்க முடியாதா?

பத்திரிகையாளர் கார்த்திகேயன்: அழைப்பிதழ் என்று சொல்லிட்டு, அதற்குப் பிறகு லெட்டர் மாதிரி என்று சொல்வது என்ன லாஜிக் என்று எனக்குப் புரியவில்லை. நீங்கள் முறைப்படி அடித்த அழைப்பிதழ்தானே வெளிவந்து இருக்கிறது. இதனை அவர்கள் மறுக்கவில்லையே, குடியரசுத் தலைவர் வரப்போகிறாரா என்ற கேள்விக்கு தீர்க்கமான பதிலே இல்லையே.

நெறியாளர்: நாடாளுமன்றத்தில் செங்கோல் வைப்பதில் ஸ்பீக்கருக்கு புதியதாக பவர் வந்திருப்பதாக இங்கே பேசியவர் குறிப்பிட்டார், இதனை நீங்கள் எப்படி பார்க்குறீங்கள்?

பத்திரிகையாளர் கார்த்திகேயன்: செங்கோல் வைத்ததினால் ஸ்ப்பீக்கருக்கு பவர் அதிகாரம் கிடைத்திருப்பதாக சொல்கிறார். முக்கியமானது அந்த செங்கோலை மவுண்ட் பேட்டன் பிரபுவிடம் இருந்து நேரு நேரடியாக வாங்கவில்லை, மவுண்ட்பேட்டன் பிரபுவிடம் இருந்து ஆதினம் வாங்கி, ஊர்வலமாக முந்தைய நாள் இரவு கொண்டுவரப்பட்டு நேரு அவர்களிடத்தில் ஆதினம் அவர்களால் ஒப்படைக்கப்பட்டது.

நேரு அவர்களிடம் இந்த செங்கோல், மவுண்ட் பேட்டன் பிரபு நேரடியாக ஒப்படைக்கப்படவில்லை என்று பல்வேறு வரலாறுகள் இருக்கின்றது. அதனால் நாம் அதற்குள் போக வேண்டாம். அப்போது நடந்தது அரசு மாற்றப்பட்டதற்கான ஒரு அடையாளம். ஒரு சுதந்திர நாடு, உங்கள் காலனி ஆதிக்கத்தில் நாங்கள் இல்லை அப்படி என்பதை பறைசாற்றும், ஒருவிதமான டிரான்சிசனை ஒரு அடையாளத்துக்காக அது கொடுக்கப்பட்டது.

இன்றைக்கு ஜனநாயக நாட்டில் , அதற்குப் பிறகு நாம் குடியரசாக ஆகிவிட்டோம். மீண்டும் அதையேதான் சொல்கிறேன். 1950 இல் குடியரசாக ஆகி விட்டோம். இன்றைக்கு இந்த நாட்டை வழி நடத்துவது அரசியலமைப்புச் சட்டம். அந்த அரசியலமைப்புச் சட்டம்தான் பிரதானமாக இருக்க வேண்டும். அதற்கு செங்கோல் தேவையில்லை. of the People, by the People, for the People என்று சொல்லிட்டு மன்னராட்சியில் இருக்கக் கூடிய செங்கோலை எதற்காக நீங்கள் கொண்டு வந்து வைக்கிறீர்கள்? இன்றைக்கு ஒரு சபாநாயகர் இருப்பார், இன்றைக்கு ஒரு பிரதமர் இருப்பார், அவர் நாளைக்கு போய் விடுவார், மக்கள் மன்றம் தான் நிரந்தரம். அவர்கள் தானே எஜமானர்கள், அங்கே செங்கோலுக்கு என்ன தேவை இருக்கிறது. உண்மையில் மதிக்கப்பட வேண்டியது அரசியலமைப்புச் சட்டம்தானே, அரசியலமைப்புச் சட்டத்தின் படி தானே.

நீங்கள் திருப்பித் திருப்பி பேசுவது, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பற்றி பேசுவது என்பது தனிப்பட்ட ஒரு திரௌபதி முர்மு அவர்களைப் பற்றிய விஷயம் இல்லை இது. குடியரசுத் தலைவர் என்கிற பதவி இருக்கு இல்லையா? அந்த பொஷிசன் அந்த ஆபிஸ் ஆப் த பிரசிடெண்ட் , அதற்கான மரியாதை கொடுக்கப்பட வேண்டும். அவர் திறக்கப்பட வேண்டும் என்பது தான் கேள்வி. இதில் நீங்கள் திருப்பி திருப்பி இங்கே செய்யவில்லையா, அங்கே செய்யவில்லையா? இப்படி பேசுவதற்காகவா உங்களை ஆட்சியில் உட்கார வைத்தார்கள் மக்கள்.

பிரதமர் 2014 இல் ஆட்சிக்கு வந்த போது பாராளுமன்றத்தை வணங்கிவிட்டு வந்தார். 2019 இல் ஆட்சிக்கு மீண்டும் வந்த போது அரசியலமைப்புச் சட்டத்தை வணங்கிவிட்டு வந்தார் . அந்த அரசியலமைப்பு சட்டத்தை வணங்கிவிட்டு வந்ததை மதிக்க வேண்டும் என்று தானே கேட்கிறார்கள்.

நெறியாளர்: எல்லா நிகழ்ச்சிகளுக்குமா குடியரசுத் தலைவரை அழைக்க வேண்டும், எல்லாவற்றையும் அவர்தான் திறந்து வைக்க வேண்டுமா?

பத்திரிகையாளர் கார்த்திகேயன்: நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன், இது என்ன பா.ஜ.க.வின் ஹெட்குவாட்டர்ஸ்ஸையா திறந்து வைக்கிறார்கள் நாடாளுமன்றக் கட்டிடத்தை திறந்து வைக்கிறாங்க , எல்லா நிகழ்ச்சிகளுக்குமா என்று பேசிக்கிட்டு இருக்கிறார்கள்.

நெறியாளர் : பிரதமர் இந்தியாவின் பிரதமர் தானே,

பத்திரிகையாளர் கார்த்திகேயன்: புரோட்டாக்கால் படி அவருக்கு மேல் இரண்டு பேர் இருக்கிறார்கள், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், ஸ்பீக்கர் ஆப் லோக்சபா என்று கூப்பிடுகிறீர்கள், ராஜ்ய சபாவிற்கு ஸ்பீக்கர் யார், அவரை ஏன் கூப்பிடப்படவில்லை, ஆண்டின் முதல் கூட்டத்தை - நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தை துவங்கும் போது குடியரசுத் தலை வரை அழைத்து தானே துவக்குறீர்கள்.

இங்கே வந்து ஆளுநரை வைத்துத்தானே தொடங்குறீர்கள், அது ஆயிரம் சர்ச்சைகள் இருக்கட்டும், கருத்து வேறுபாடுகள் இருக்கட்டும், அதனை தொடங்கும் போது ஆளுநரை அழைத்துதானே தொடங்குகிறார்கள்.

இது ஒரு சரித்திர நிகழ்வு, அடுத்த நூறு ஆண்டுகளுக்கோ, மேலும் எவ்வளவோ ஆண்டுகளுக்கோ இதுதான் நாடாளுமன்றம். இந்தியாவின் தலையெழுத்தை அல்லது எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடிய பாராளுமன்றத்தை, அதனை துவக்கும் நிக ழ்ச்சிக்கு, குடியரசுத் தலைவரான முதல் குடிமகனைப் புறக்கணிப்பது எப்படி சரியாகும்.

அன்று திரௌபதி முர்முவை எதிர்த்தார்கள் என்றால், இன்று திரௌபதி முர்மு அவர்கள் தான் குடியரசுத் தலைவர் ஆகி விட்டார், அவரை பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ, அவர்தான் குடியரசுத் தலைவர். மோடி அவர்கள் மீது ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் அவர்தான் பிரதமர். அதே போல் தான் திரௌபதி முர்முவை தேர்ந்தெடுக்கப்படும் போது எதிர்க்கட்சிகளுக்கு அவர் வேட்பாளராக இல்லாமல் இருக்கலாம், ஆனால் இன்றைக்கு அவர் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பதவியை அவர் அலங்கரிக்கும்போது அதற்குரிய அங்கீகாரமும், அதற்குரிய மதிப்பும் அவருக்கு வந்திருக்கிறது. அதனை குறைக்கப்படும் போது அதனைக் காக்க வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் இருக்கிறது.

இவ்வாறு பத்திரிகையாளர் கார்த்திகேயன் ‘நியூஸ் 18 தொலைக்காட்சி’ சொல்லதிகாரம் விவாதத்தில் பங்கேற்று பேசினார்.

எனது சகோதரர் வீட்டுச் சுவர் ஏறி அதிகாரிகள் நுழைந்துள்ளனர்!

சோதனைகளை எதிர்கொள்வது எங்களுக்குப் புதிதல்ல!

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேட்டி!

சென்னை, மே 28 -

எனது வீட்டில் வருமான வரித்துறை சோதனை நடக்கவில்லை என்று அமைச்சர் செந்தில் பாலாஜி கூறினார். தமிழ்நாடு முழுவதும் அரசு ஒப்பந்ததாரர்கள் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். டாஸ்மாக் மற்றும் மின்துறை ஒப்பந்ததாரர்கள் வீடுகளில் வருமான வரித்துறை சோதனை நடத்தி வருகின்றனர். சென்னை, கரூர், கோவை உள்ளிட்ட 100 இடங்களில் இந்த சோதனை நடந்து வருகிறது. இந்த சோதனைக்கான காரணம் வெளியாகவில்லை. காலை 7 மணி முதல் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், வருமான வரிச் சோதனை குறித்து அமைச்சர் செந்தில் பாலாஜி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

வருமானவரித்துறை சோதனை எனது சகோதரர் இல்லம், நண்பர்கள், உறவினர்கள், எங்களுடைய நண்பர்கள், உறவினர்கள் என பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக இன்று காலை சில தொலைக்காட்சிகளும், சில பத்திரிக்கைகளில், சமூக வலைதளங்களில் வெளியிட்டதை போல எனது இல்லத்தில் இது போன்ற சோதனைகள் எதுவும் நடைபெறவில்லை என்று முதலில் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். நடைபெற்றாலும் அதை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்கிறோம்.

இந்த பேட்டியை கொடுப்பதற்கு முன்பதாக திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக இன்று நடைபெறுகிற இந்த சோதனை குறித்து கழகத்தினுடைய அமைப்பு செயலாளர் போற்றுதலுக்குரிய ஆர்.எஸ்.பாரதி முதல மைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மிக தெளிவான விளக்கங்களை சற்றுமுன் அளித்திருக்கின்றார்கள். எனவே இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அதுநடைபெற்ற சில விரும்பத்தகாத செயல்கள் குறித்தும் எதனால் அது ஏற்பட்டது என்பது குறித்தும் ஆர்.எஸ். பாரதி மிக தெளிவாக விளக்கங்களை தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே இந்த சோதனை என்பது புதிதாக நாங்கள் எதிர்கொள்வது அல்ல. ஏற்கனவே சட்டமன்ற தேர்தலுக்கு இறுதி பிரசாரத்திற்கு முன்பாக இதுபோன்ற வருமான வரிசோதனைகளை எதிர்கொண்டோம். தேர்தலுக்கு பிரச்சாரம் இறுதியில் நெருங்குகின்ற நாட்களில் அவசியம் நேரில் வரவேண்டும் என்று அறிவுறுத்தினார்கள், கட்டாயப்படுத்தினார்கள் அப்போது கூட சொன்னோம் வாக்கு பதிவுக்கு முன்பதாக எங்களை வரவழைத்து சோதனை என்ற பெயரில் இறுதிகட்ட பிரச்சாரத்தை முன்னேடுப்பதற்கு தடை செய்வதற்கு முயற்சியாக இருக்கும் என்று பிரச்சாரம் முடியட்டும் அதற்கு முன்பாக நீங்கள் எந்த நடவடிக்கைகளும் எடுங்கள் அல்லது முழுவதும் வீடுகளுக்கு சீல் வைத்தாலும் சரி அல்லது வீட்டில் எனது பெற்றோர்கள் இருக்கிறார்கள் அவர்கள் முன்னிலையில் சோதனை செய்து முழுவதும் நீங்கள் என்ன கைபற்றினீர்களோ அவைகளை அவர்களின் கையொப்பம் பெற்று சோதனையை நிறைவு செய்யுங்கள்.

தேர்தல் முடிந்த பிறகு அதற்கான விளக்கங்களை சொல்ல நான் தயார் நிலையில் இருக்கிறேன் என்று சொன்னேன்,, இப்போது எனது இல்லம் தவிர என்னுடைய சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அவர்களுடைய நண்பர்கள், உறவினர்கள் வீடுகள் உள்ளிட்ட பல இடங்களில் சோதனைகள் நடைபெற்று வருகின்றன. இதில் என்ன சிறப்பு செய்தி என்று கேட்டால் இன்று வருமான வரித்துறை சோதனை நடத்துகின்ற பெரும்பாலான இடங்கள், ஏற்கனவே வருமான வரி செலுத்த கூடியவர்கள், வருமான வரியை யாரும் ஏமாற்ற கூடிய வர்கள் அல்ல இன்று சோதனை நடைபெற்று கொண்டு இருக்கிறது குறிப்பாக அந்த விரும்பக் கூடாத சம்பவங்களை தொடர்ந்து உடனடியாக நான் அவர்களுக்கு தொடர்புகொண்டு நிர்வாக பெருமக்கள் சோதனை நடைபெறுகின்ற இடங்களில் இருக்கக் கூடாது முழு ஒத்துழைப்பை சோதனைக்கு வந்திருக்கிறவர்களுக்கு தருமாறு சொல்லியிருக்கிறேன். சொன்ன உடனே அங்கிருந்து களைந்து சென்று இருக்கிறார்கள். எத்தனை இடங்களில் நடைபெற்றாலும் அவர்கள் கேட்கின்ற ஆவணங்களை வழங்குவதற்கு தயாராகதான் இருக்கின்றோம். எவ்வளவு நாட்கள் நடத்தினாலும் முழு ஒத்துழைப்பை வழங்கிட தயார் நிலையில்தான் இருக்கின்றோம். இதில் எந்த விதமாற்று கருத்தும் இல்லை, இதை தெளிவாக சொல்ல வேண்டும் என்றால் இந்த சோதனை முழுவதுமாக நிறைவு பெற்ற பின்பு என்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கிறது, என்ன என்ன கைப்பற்றப்பட்டிருக்கிறது, என்ன கருத்துக்களை அவர்கள் முன் வைக்கிறார்கள் என்பதை முழுவதுமாக தெரிந்துகொண்டு அதன் பிறகு நான் என் கருத்துக்களை பகிர்ந்துகொள்ள சரியாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். ஆகையால் முழு சோதனை முடிந்த பிறகு நான் மீண்டும் உங்களை சந்திக்கின்றேன்.

1996 ஆம் ஆண்டு முதன் முறையாக சுயேச்சையாக நின்று ஒன்றியக்குழு உறுப்பினராக வெற்றிபெற்றேன். அன்று தொடர்ந்து இன்று வரை 26 ஆண்டுகாலம் பொதுவாழ்வில், குறிப்பாக கரூர் மக்கள் தொடர்ச்சியாக என்னை வெற்றி பெறச் செய்து மக்கள் பணி ஆற்றக் கூடிய வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள். உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய குறிப்பாக இந்தியாவில் இருக்கக்கூடிய முதல்வர்களுக் கெல்லாம் முதல்வராக சிறந்த ஆட்சியை நடத்தக் கூடிய தமிழகத்தின் ஒப்பற்ற முதலமைச்சர் தளபதி அவர்கள் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடக் கூடிய வாய்ப்பை அரவக்குறிச்சியில் வழங்கி அதன் தொடர்ச்சியாக கரூரிலும் போட்டியிட கூடிய வாய்ப்பை வழங்கி தேர்தல் பிரச்சாரம் செய்து வெற்றி பெறச்செய்து அமைச்சரவையிலும் பணியாற்றக் கூடிய ஒரு வாய்ப்பை வழங்கி இருக்கின்றார்கள். எனவே, மக்கள் அங்கீகரிக்கக்கூடிய எங்களுடைய தலைமை எங்களுடைய கழகத் தலைவர் முதலமைச்சர் மிகப்பெரிய அங்கீகாரத்தை எனக்கு வழங்கியிருக்கிறார்கள். ஆகையால், வருமான வரித்துறை சோதனை என்ற பெயரில் ஏதாவது தவறு இழைத்திருந்தால் அல்லது வரி ஏய்ப்பு செய்திருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம் அதில் எந்த விதமான மாற்றுக் கருத்தும் இல்லை. அதிகாலையில் காலிங்பெல் அடிக்கும் பொழுது, முகம் கழுவி துடைத்து விட்டு வந்து கதவை திறப்பதற்கு ஒரு 5 நிமிடங்களாவது ஆகும் அல்லவா அதற்குள்ளாகவே சுவர் ஏறி குதித்து உள்ளே நுழைந்தால் எப்படி?

நிர்வாக தரப்பினருடன் சில விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது. உடனடியாக நிர்வாகப் பெருமக்களை கலைந்து செல்ல அறிவுறுத்தியதின் பேரில் புறப்பட்டுச் சென்று விட்டார்கள். இன்னொரு கருத்தையும் நான் முன் வைக்க விரும்புகிறேன். 2006 சட்டமன்றத்தினுடைய முதல் தேர்தலில் என்னதாக்கல்செய்தேனோ அதன் பிறகு இன்று வரை ஒரு சொத்து என் பெயரில் இருந்து பத்திர அலுவலகம் சென்று கையொப்பமிட்டு நான் விற்பனை செய்திருக்கின்றேன். 2006 முதல் இன்று வரை நானோ என் குடும்ப உறுப்பினர்களோ, என் பெற்றோர்களோ என் சகோதரர் பெயரிலோ எந்த சொத்தும் புதிதாக பதிவு செய்யவில்லை. வாங்கவும் இல்லை. மக்கள் கொடுக்கும் அங்கீகாரமே போதுமானது. அதுபோன்ற நடவடிக்கைகளில் எப்போதும் ஈடுபட மாட்டோம். சில வாரங்களுக்கு முன்பாக என்னுடைய சகோதரர் இல்லம் குறித்து ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக ஒரு உண்மையை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்கிறேன். என்னுடைய தம்பி மனைவியினுடைய தாயார் அவர்கள் தங்களுடைய சொத்துக்களை, தன்னுடைய கணவர் இறந்த பிறகு, தன்னுடைய மகள்களுக்கு தானமாக கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு தம்பி மனைவிக்கு அவருடைய தாயார் அளித்த இடம் தான் தற்போது வீடு கட்டுவதாக கூறப்படும் இடம். அதன் உண்மைத் தன்மை என தெரிந்து கொள்ளாமல் சிலர் சமூக வலை தளங்களில் பதிவிட்டார்கள். 2006 முதல் இன்று வரை நானோ என் குடும்ப உறுப்பினர்களோ எந்த புதிய சொத்தும் வாங்கவில்லை. வாங்கவும் மாட்டோம்.

இருக்கின்ற சொத்துக்களே எங்களுக்கு போதுமானது. மக்கள் கொடுக்கும் அங்கீகாரமே போதுமானது. எங்கள் தலைவர் முதல்வர் அவர்கள் நான் நினைத்துப் பார்க்காத அளவிற்கு மிக உயர்ந்த இடத்தைக் கொடுத்து மக்கள் பணியாற்றும் அங்கீகாரத்தை வழங்கியிருக்கின்றார்கள். என் வாழ்நாள் முழுவதும் நன்றியுணர்வோடு பணியாற்றக்கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கியிருப்பவர்களுக்கு பாதம் பணிந்து நன்றியுணர்வோடு பணியாற்றுவேன். ஏற்கனவே என் சகோதரர் உட்பட அனைவரும் அட்வான்ஸ் வரி செலுத்தக் கூடியவர்கள். இந்த வருமான வரி சோதனையில் ஏதேனும் வரி ஏய்ப்பு கண்டறிந்தால் அதனை செலுத்தவும் தயாராக உள்ளோம். இந்த வருமான வரி சோதனையைப் பொறுத்த மட்டில் எத்தனை நாட்கள் நடைபெற்றாலும் அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளித்து சோதனை நிறைவில் ஏதேனும் தவறு இருப்பின் சுட்டிக்காட்டினால் அந்த தவறை சரி செய்து தருவதற்கும் தயாராக இருக்கின்றார்கள் என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் (க&ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை – 5
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 03 கட்டட (க&ப) வட்டம் / 2023–2024/ நாள்: 23.05.2023
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை: மொத்த வகை / இன விலை முறை
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க/ப) வட்டம், சென்னை – 5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

வ. எண்	பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை	பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை	காலம்	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு
1	சென்னை-3, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள நோயியல் தொகுதியை நாம்பியல் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை துறைக்கான தொகுதியாக மாற்றியமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பணி. மு.வை.தொகை: ரூ. 89,000/–	ரூ. 157.60 இலட்சங்கள்	6 மாதங்கள்	வகுப்பு IV
2	செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் உள்ள ஐவஹர்லால் நேரு விருந்தினர் மாளிகையை (தொழிலாளர் வாரிய விருந்தினர் மாளிகை) புதுப்பிக்கும் பணி. மு.வை.தொகை: ரூ. 79,100/–	ரூ. 138.10 இலட்சங்கள்	8 மாதங்கள்	வகுப்பு IV
3	திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் கிளை நூலகக் கட்டடம் கட்டும் பணி. மு.வை.தொகை: ரூ. 55,500/–	ரூ. 90.50 இலட்சங்கள்	7 மாதங்கள்	வகுப்பு IV

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 20.06.2023 மாலை 03.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 20.06.2023 மாலை 04.00 மணி
செ.ம.தொ.இ/2738/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேப்பாக்கம், சென்னை – 5
“சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்.”

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை
பே.சா.து.ந.க.எண்.பி3/1846&1847/2023 மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை
கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு மறு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது

பணியின் விவரம்	பணியின் மதிப்பு (தோராயமாக 18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்)	முன் வைப்புத் தொகை	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை
பே.சா.து.ந.க.எண்.பி3/1846 & 1847 /2023 பேருந்து சாலைகளில் மண்டலம் I முதல் VIII மற்றும் IX முதல் XV வரை உள்ள ஒட்டு பணிகளை கோல்டு மிக்ஸ் இன்ஜெக்ஷ